செய்தி வெளியீடு :345 நாள்: 19.06.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, வருவாய்த் துறை மூலம், ஏழை எளிய மக்கள், மாணவ மாணவியர்களுக்காக நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டப் பணிகள் குறித்து அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று (19.06.2012) எழிலகம் வருவாய் நிருவாக கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்லைவி அம்மா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், விரைவு பட்டா மாறுதல் திட்டம், 6ஆம் வகுப்பு முதல் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்குத் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளிகளிலேயே வழங்குதல், இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல், நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள வட்டங்களைப் பிரித்து, பொது மக்களின் வசதிக்காக புதிய வட்டங்களை ஏற்படுத்துதல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக விரிவான ஆய்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா இ.ஆ.ப., நில அளவை / நிலவரித் திட்டம் மற்றும் நில நிருவாகத்துறை (பொ) முதன்மைச் செயலர்/ ஆணையர் முனைவர் ஆர்.கண்ணன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. கு.ஞானதேசிகன் இ.ஆ.ப., நில சீர்திருத்தத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆ.ப., சிறப்பு திட்ட அமலாக்கத் துறையின் செயலர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்துறை இயக்குநர் திரு. எஸ்.முருகையா இஆ.ப., இணை ஆணையர் முனைவர் திரு. மு. ஜெயராமன் இ.ஆ.ப., மற்றும் அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**